முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 14 திகதி முதல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 21 திகதி வரை

(28.05.2023 ஞாயிறு முதல் 04.06.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஆறுமுகப் பெருமான் ஆற்றலாக
   அவதாரம் எடுத்த அரங்கனே
   வரமாக உன் தருமசேவை
   வையகத்தினை காத்து வர
2. வருகவே அரங்கன் உமைபோற்றி
   வழங்குவேன் அகத்திய மகரிஷியும்
   பெருமைமிக்க இந்தியா தமிழகத்தில்
   புகலுவேன் சோபகிருது விடைதிங்கள்
3. திங்களிலே முன்னான்கீர் திகதிமேல் மூவேழு திகதிவரை
   தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக
   இங்கனமே வருங்கால பலன்குறித்து
   இயம்பிடுவேன் வார ஆசிதன்னை
4. தன்னிலே மாமன்னரும் தோற்பது மமதையாலே
   தம்மக்களை வஞ்சிக்கும் செயலினாலே
   இன்னலான தாமென்ற செருக்கடக்கி
   இவ்வுலகில் தயவாக நடத்தாவிட்டால்
5. விட்டாலே பலவாறு சறுக்கல்
   வினையாக மாறி ஆளுமைக்கு
   கட்டம் நட்டமாக மாறநேரும்
   கண்டுரைப்பேன் சேவைமறந்து

6. மறந்து கொள்ளை நோக்கம்
மக்களை தவிக்க விடும்படி
தொடர்ந்து ஆளுமை இருந்தால்
தெரிவிப்பேன் பங்கம் உண்டாகி
7. உண்டாகி பலமிழந்து வாடநேரும்
உத்தமர்களாக ஆளுமைதனை
கொண்டுவிட அரசுக்கு நன்மை
கூடுவதுடன் தேசத்துக்கும் வளர்ச்சி
8. வளர்ச்சிக் கூடி மாற்றமாக
வந்தடையும் வாழ்வாதாரமதில்
வளர்ச்சி மேம்பட்டு இனிதே
வறுமை காணா தேசமாக
9. ஆகவே இந்தியா தமிழகம்
அனைத்து வகையும் தேறியே
செகம் வியக்க மாற்றமதும்
செய்தொழில் கழனி கிருஷியென
10. கிருஷியென சேமிப்பு மிகுந்த
குறைவிலா பொருள்வளம் கண்ட
வருங்காலம் இந்தியா தமிழகத்துக்கு
வளர்ச்சி நிலைகளாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் வைகாசி மாதம் **14**ம் நாள் **28.05.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் **21**ம் நாள் **04.06.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் எல்லையில்லாத சக்திகளை பெற்று இவ்வுலகினில் அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகனே தாம் செய்கின்ற அளவிலாத தர்மங்கள் இவ்வுலகினை காத்து வருகின்றதப்பா அவதார ஞானியே தர்மத்தின் தலைவ அரங்க மகா தேசிகரே உம்மை போற்றியே அகத்திய

மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் வைகாசி மாதம் **14**ம் நாள் **28.05.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் **21**ம் நாள் **04.06.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இவ்வுலகினிலே மாமன்னர்களும் மமதையால் தோற்பார்கள் தம் மக்களை வஞ்சிப்பதால் தோற்பார்கள் துன்பம் அளிக்கும் கேடான குணமாகிய தாம் என்கிற செருக்கினை அடக்கி மக்களிடத்து தயவுடன் நடந்து கொள்ளாவிட்டால் பலவிதங்களில் தாழ்வினை சந்திக்க நேருமப்பா அவர்களது தவறான செயல்களே அவர்களுக்கு தீயவினைகளை உண்டாக்கி அவர்களது ஆட்சிக்கும் அரசுக்கும் மக்களுக்கும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் உண்டாக்குமப்பா.

மக்களுக்கு சேவை செய்வதற்காகத்தான் பொறுப்பை ஏற்றோம் என்பதை மறந்து மக்களின் வரிப்பணத்தை கொள்ளை அடிக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு மக்களின் வரிப்பணத்தை சுயநலமாக செயல்பட்டு வீணடித்தால் தனதாக்கிக் கொண்டு மக்களை தவிக்கவிட்டால் ஆட்சிக்கு இடையூறு உண்டாகி ஆட்சி செய்வதற்கு உண்டான பலத்தை இழந்து வாட நேருமப்பா.

உண்மை நிலை உணர்ந்து உத்தமர்களாக ஆகி ஆட்சிபுரிய அரசுக்கும் மக்களுக்கும் பலவித நன்மைகள் உண்டாகி நாடு வளர்ச்சி அடையும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வறுமை இல்லாத தேசமாக மாறிடும் இந்தியா தமிழகம் எல்லா விதத்திலும் முன்னேறி உலகம் வியக்க மேம்பாடு அடையும்.

தொழில்துறை, விவசாயம், இயற்கை வளம், பொருளாதாரம், கையிருப்பு என எல்லா விதத்திலும் மேம்பட்ட நிலையில் இந்தியா தமிழகம் விரைந்து முன்னேறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**அருளாம் வேலவன் அருளிய நூலாம்**
**இருளெல்லாம் விலகி வாழ்வில் இன்பம் உண்டாம்.**

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1325

சுவடி வாசித்தளித்தவர் *T*. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.05.2023, செவ்வாய்கிழமை

1. கருணைவடிவான ஞான குருவே
கலியுகத்தைக் காக்க வந்த தவகுருவே
பெருமைமிக்க தொண்டர்களை படைத்து
பேருலகை மாற்ற வந்த அவதார எந்தன் சூட்சுமமே

2. சூட்சுமம் மிகுந்த அரங்கன் உந்தனுக்கு
சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
மாட்சிமைபட சோபகிருது விடை திங்களில்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 02 ம் நாள், 16.05.2023, செவ்வாய்கிழமை)
மகான் உந்தனுக்கு ஆற்றல்பெருக எடுத்துரைப்பேன்

3. உரைப்பேன் ஞான அறிவுரை ஆசி
உலகமெங்கும் அரங்கன் ஞானம் பரவிநிற்க
குறைவின்றி அரங்கன் கொள்கைஏற்று குவலயத்தில்தொடரும் மக்களுக்கு
நிறைவாக அனைத்து வெற்றி கொள்ளும் நீதிநெறி மாறாத வாழ்வாய் மாறி

4. மாறியே அவரவர் ஆற்றலும்
மகத்துவம்பட மகான்கள் ஆசியோடு
தேறிநிற்கும் உலகை வெல்லும் வண்ணம்
தொண்டு வழியே அரங்கன் அற்புதம் நிகழ்த்த

5. நிகழ்த்துகின்ற அரங்கன் மார்க்கமே
நிலவுலகை காக்கும் உயர்மார்க்கமாகும்
ஜெகத்தினில் உலகோர் ஏற்றால் போதும்
சித்திகள் சடுதி உலகம் காணுமப்பா

6. அப்பனே அரங்கன் மூலமாகத்தான்
ஆறுமுகன் அற்புதம் நடத்துகின்றேன்

ஒப்புகொண்டால் உலகில் சடுதி மாற்றம்
ஓங்கார ஞான உலகமாக அமையக்கூடும்

7. கூடாத தீவினை அத்தனையும்
குவலயத்தை விட்டு ஓட இருக்க
நாடெங்கும் உள்ள அரங்கன் தொண்டர்கள்
ஞானத்தோடு தர்மத்தை செய்தால் போதும்

8. போதுமப்பா மாற்றம் தானாகவே
புண்ணியவழிகொண்டு இனிதே மாறி
பூதலமெங்கும் ஞானவான் ஆட்சியாக
புண்ணியவான்கள் நிறைந்த ஞான சபையாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் சரவண பவ

உலக மாற்றத்திற்காகவே மகான் முருகப்பெருமான் எடுத்துள்ள கலியுக அவதாரம் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளாகும். சுத்த தேகமான ஞானதேகத்தை தக்க வைத்துள்ள ஓங்காரக்குடிலாசான் இயற்கையின் பரிணாம வளர்ச்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள மாபெரும் தவசியாவார்.

ஓங்காரக்குடிலாசான் போதித்து வரும் சுத்த சன்மார்க்க சைவ நெறி கொள்கைகளான,

- உயிர்கொலை தவிர்த்தல்
- சுத்த சைவ உணவினை மேற்கொள்ளுதல்
- பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்தல்
- மகான் முருகபெருமானின் திருவடிகளை பூசித்தல்

போன்ற உயர்கொள்கைகளை கடைப்பிடித்து வரும் தொண்டர் கூட்டம் பெருகி வருவதால், உலகமே தர்ம வழியில் செயல்பட்டு, ஞானிகளின் ஞான சித்தர் ஆட்சி மகான் முருகப்பெருமான் தலைமையில் விரைவில் மலரும் என்று மகான் முருகப்பெருமான் ஞான அறிவுரையாக அருளியுள்ளார்கள்.

<u>அருளாளர் அருளிய அற்புத விளக்கம்</u>

உயிரினங்களுக்கு சைவ உணவு கொடுத்து பசியாற்றி மகிழ்விப்பதே உண்மை ஞானமாகும்.

நற்றவ வேலனை நாளும் போற்றிட
பற்றற்ற வாழ்வும் பரகதியும் கூடுமே.

பற்றற்ற வேலவன் பதமலர் போற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்.

அற்புத வேலவன் அருளினைப் போற்றிட
கற்பக விருட்சம் கைவசம் ஆகுமே.

புண்ணிய வேலவன் பொற்பதம் போற்றிட
எண்ணிய அனைத்தும் எளிதில் சித்தியே.
ஞானமாம் வேலனை நாளும் போற்றிட
ஈனமும் தவிர்த்தே பேரின்பமும் உண்டாம்.

எந்தை வேலவன் இணையடி போற்றிட
சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே.

ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

இருவினை வென்ற எந்தை வேலவன்
திருவடி போற்றிட சித்தியும் உண்டாம்.

சைவத்தலைவன் சண்முகனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரென
அண்டியவருக்கே அருளினார் வேலனே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

“தாயாக தந்தையாக, தயவுடைய தெய்வமாக, ஆவியோடு கலந்த ஆறுமுகப்பெருமான் திருவடிகள் போற்றி! போற்றி!!”

ஓம் சரவண பவ

## தாடியும் ஜடாமுடியும் சன்மார்க்க அன்பர்களுக்கு தேவையில்லை

சன்மார்க்கவாதிகளுக்கு தாடியும், ஜடாமுடியும் தேவையில்லை. மீசை இருப்பது அழகே. சன்மார்க்கவாதிகள் தாடி, ஜடாமுடி வளர்ப்பதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

சமீபத்தில் அவதரித்த மகான் இராமலிங்க சுவாமிகள் உள்பட மகான் பட்டினத்தார், மகான் மாணிக்கவாசகர், மகான் அருணகிரிநாதர், மகான் திருஞானசம்பந்தர் போன்ற மாதவம் புரிந்த மகான்கள் யாரும் தாடியோ, ஜடாமுடியோ வளர்த்து கொள்ளவில்லை என்று எனது ஆசான் துறையூர் சின்னசாமி சாஸ்திரிகள் கூறியுள்ளார்கள்.

முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1327

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.05.2023**, வியாழக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானவான்கள் துணைகொண்ட தேசிகனே
வனவர்கள் மெச்சும் அரங்கனே
வாழுகின்ற வள்ளலே ஞானத்தலைவனே

2. தலைவனாக எந்தன் அவதாரமாக
தரணியில் அற்புதம் நடத்தவந்த
காலத்தை வென்ற தேசிகனே
கருணையே வடிவான குருஅரங்கனே

3. ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 04 ம் நாள், 18.05.2023, வியாழக்கிழமை)
காலமதில் அரங்கன் உன் திருவடி பற்றி
கலியுகத்தார் ஞானம் பயில

4. பயிலுகின்ற அன்பர்கள் அவரவர்க்கும்
பழுதின்றி ஞானம் சித்திக்கும்
தயவோடு உன் திருவடி பற்றி
தர்மத்தை தொடரும் மக்களுக்கு

5. மக்களுக்கு ஆறுமுகன் யான் இறங்கி
தர்மவடிவாக உலகில் காட்சி தந்து
தந்துமே அவரவர்கள் பிறவாமைக்கு
தக்கபடி சர்வபலம் தந்தருள்வேன்

6. பெருமைமிக்க உன் தர்மத்தில்
பிசகின்றி எந்த பொருள் பற்றுமின்றி
உருகி மனமுருகி உன் பூஜைசெய்து
உயர்வாக கடைபிடித்த அன்பர்கட்கெல்லாம்

7. அன்பர்கள் எல்லோருக்கும் இனிதே
ஆறுமுகன் யான் அவரவர் வாழ்வாதாரம் உயர்த்தி
இன்பமான இல்லற சிறப்போடு
இனிதே அவரவர் குடியவர்க்கும் ஞானம் இந்த தர்மத்தின் மூலம் தந்தருள்புரிவேன்

8. அருளவே உண்மை விசுவாசிக்கு அகிலத்தில் தனிப்பெரும் தன்மை உண்டு
பெருமளவில் அவர்கள் வாழ்விலே பிரம்ம சூட்சும மகா இரகசியங்கள்
இரகசியங்கள் எல்லாம் அரங்கன் காட்சியாகவே
இந்த உலகில் சயனவழி தியானத்தின்வழி சர்வசூட்சுமத்தின் வழி வெளிபட்டு அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

உலக மக்கள் அனைவரும் என்னை தரிசிக்க வேண்டும் என்பதாலே நான் துறையூர் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகராக அவதாரம் எடுத்துள்ளேன். ஓங்காரக்குடிலாசானை தரிசிப்பது என்பது என்னை தரிசிப்பதாகும். நானே குடிலாசான். குடிலாசானே நானாவேன் என்று மகான் சுப்ரமணியர் ஞான அறிவுரை ஆசியாக அருளியுள்ளார்கள்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் **27000** ஆண்டுகள் தவம் புரிந்தவராவார். பல பிறவிகளில் மகான் முருகப்பெருமான் திருவடிகளில் தான் மேற்கொண்ட கடுந்தவம் காரணமாக இந்த பிறவியில் மகான் முருகப்பெருமானே ஓங்காரக்குடிலாசானாக அவதரித்துள்ளார்கள். மகான் முருகப்பெருமானே சித்தார்த்தி ஆண்டு சித்திரை மாதம் **13**ம் தேதி **(26.04.1979)** வியாழக்கிழமை அமாவாசை திதி அன்று ஓங்காரக்குடிலாசானுக்கு காட்சியளித்து, வாசி நடத்திக் கொடுத்து ஓங்காரக்குடிலாசானின் வாசியோடு வாசியாக கலந்து விட்டார். முற்றுப்பெற்ற

ஞானிகள் ஒன்பது கோடி பேரும் மகான் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டவர்களே. மகான் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டவர்களுக்கு மரணமில்லை.

ஓங்காரக்குடிலாசானை தரிசித்து ஆசி பெறும் மக்களுக்கு வாழ்வில் முன்னேற்றம் உண்டாகுவதோடு, நோயில்லாத, வறுமையில்லா வாழ்க்கையும் அமைந்து, செல்வம் பெருகி, ஞானமும் சித்திக்கும் என்று மகான் முருகப்பெருமான் ஞான அறிவுரை ஆசி நூலில் அருளியுள்ளார்கள்.

முற்றும் அறிந்த முருகப்பெருமான் திருவடியை
பற்றுடன் போற்றிட பரகதியும் கூடுமே.

நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.

ஞானமாம் வேலனை நாளும் போற்றிட
ஈனமும் தவிர்த்தே வாழ்வில் இன்பம் உண்டாம்.

தக்கதோர் வேலவன் தாளினைப் போற்றிட
பக்கத்துணையாம் பரகதியும் கூடுமே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1328

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.05.2023**, வெள்ளிக்கிழமை

1. கருணையே வடிவான குருபரனே
கந்தவேலன் என்சூட்சுமமான குருஅரங்கனே
பெருமைமிக்க ஞானசுடரேற்றி பேருலகை
ஞானஜோதி பரவும் வண்ணம்

2. வண்ணமுடன் ஆற்றலாய் சைவநெறி
வழங்கி உலகோர்க்கு தர்மம்காக்கும்
காக்கின்ற அரங்கனே கருணாகரனே
கருணைபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்

**3.** பெருமைபட ஞானஅறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது விடைதிங்கள் தன்னில்
**(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 05ம் நாள் 19.05.2023, வெள்ளிக்கிழமை)**
தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
தவசி தருகின்ற தர்மமே கலியின் சிறந்த தர்மம்

**4.** மண்ணுலகோர் அரங்கனை ஏற்று
மாதர்மத்தை கையில் கொண்டு
எந்நாளும் அரங்கன் நாமஜெபத்தில் இருந்து கொண்டே
உயர்ந்த தர்மம் தொடர்ந்து செய்ய

**5.** செய்யவே உலகில் பெருமாற்றம் சேவை வழியே நடந்தேறக்கூடும்
ஐயன் முருகன்என் அருள்பலம் கொண்ட அரங்கன்
அகிலத்தை மாற்றுவதோடு இந்த கலியில் ஞானஆட்சி தந்து
உலகோர் மகிழ அமைதிபெற பாதுகாப்புற ஆற்றல்பட அற்புதம் நிகழ்த்தக் கூடும்

**6.** கூடவே அரங்கன் திருவடி பற்ற
குலமே பெருமை கொண்டு உலகத்தார்க்கு பிழையற
பேதமெல்லாம் அகன்று புகலுவேன் பிரம்ம ஞானசூட்சுமம் கூடி
காலனையும் வெல்லும் சக்தி பெற்று கலியுகத்தார் ஞானிகளாக
மாற்றம் பெறுவர் ஞானஅறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

## <u>மகான் முருகப்பெருமானை வழிபடும் முறை</u>

உலக ஞானத்தலைவன் மகான் முருகப்பெருமான் திருவடிகளை பூசிக்க விரும்பும் மக்கள் ஒரு ஜோதி ஏற்றி வைத்து பூசிக்க வேண்டும். ஜோதி ஏற்றும் போது “ஓம் சரவணஜோதியே நமோ நம” என்ற மகாமந்திரத்தை சொல்லி ஏற்ற வேண்டும். ஜோதி ஏற்றி வைத்து விட்டு,

முருகா !

இந்த ஜோதியில் கலந்திருந்து அருள் செய்யுங்கள் முருகா!

இந்த அடிமையை காப்பாற்றுங்கள் முருகா !

என மகான் முருகப்பெருமான் திருவடியை வேண்டி வந்தால் ஏற்றி வைத்துள்ள ஜோதியில் மகான் முருகப்பெருமான் கலந்து இருந்து அருள் செய்வார்.

பிறப்பை ஒழித்த பெருந்தகை வேலனை
சிறப்புடன் போற்றிட சித்தியும் உண்டாம்.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

முருகப்பெருமான் துணை

**மகான் கதம்பமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.05.2023**, சனிக்கிழமை

**1.** தரணி காக்கும் மகா சக்தியாக
தவபலமோடு வந்த அரங்கனே
சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஞான தேசிகனே

**2.** தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது விடைதிங்கள்
ஆறாம் திகதியதும் காரிவாரம்
**(**சோபகிருது வருடம் வைகாசி மாதம் **06**ம் நாள் **20.05.2023**, சனிக்கிழமை**)**

**3.** வாரமதில் கதம்பமகரிஷி யானும்
வழங்குவேன் உலகநலம் காண
சோரமில்லா அரங்கன் மயமான
**(**அசுத்த தேகமில்லா, மாசற்ற தேகத்தையுடைய ஓங்காரக்குடிலாசான்**)**
செகமதும் தருமவழிக்கு வருதல்காண

**4.** காணவே உலகம் மாற்றம்
கந்தப்பெருமான் ஆளுமைகொண்ட
ஞான பூமியாக மாற்றம் பெறும்
ஞானவழிகளில் மக்களை தேற்றி

**5.** தேற்றி நன்மை அருளுகின்ற
தேசிகன் மேல் ஆற்றல்பட
பற்று வைத்து மக்களெல்லாம் வர
பாடிடுவேன் எங்கும் மாற்றம்

6. மாற்றம் ஞானத்தெளிவாக
மரணம் மறுமை விரட்டும்
(மரணத்தையும் கொடுத்து மீண்டும் பிறவியை தருவது அசுத்த தேகமே)
ஆற்றல் சிந்தை செயல்பாடாக
ஆறுமுகனாரை தேடும் பலமாக

7. ஆகவே மக்களிடை சக்திநிலை
அறிவுத் தெறிவு நம்பகநிலை
மிகுதியாகி மாற்றம் நிகழும்
மேலான ஞானிகள் துணைவர

8. வருகவே வளர்ச்சி நிலையோடு
வல்லமையான செயல்வடிவாகி
தருமம் காத்து வளர்க்கின்ற
தன்னார்வத் தொண்டு பெருகி

9. பெருகியே மனித நிலையானது
பிறப்பின் பயனை அடைவதாக
பெருந்தன்மை கூடிய வண்ணம்
பிரபஞ்சம் வியக்க புனிதநிலை காணும்

10. காணவே அரங்கன் தேடலில்
கலந்து வரும் தொண்டர்கள் யாவரும்
ஞானவான்களாகத் தேறியே
ஞானிகள் ஆவர் உலகினில்

11. உலகினில் ஞானப்படைபெருக
உண்மையான மாற்றமாக
உலகம் ஞானலோகம் ஆகும்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

மனித உடம்பு சுத்த தேகமாகிய சூட்சும தேகம், அசுத்த தேகமாகிய தூல தேகம் இரண்டும் இணைந்த தேகமாகும். மனிதனுக்கு மரணத்தை உண்டுபண்ணுவது அசுத்த தேகமே. அசுத்த தேகம் என்பது மாசுள்ள தேகமாகும். சுத்த தேகம் மாசற்ற ஒளி பொருந்திய தேகமாகும். மாசற்ற

தேகத்திற்கு மரணமில்லை. மரணமில்லா காரணத்தினால் மீண்டும் பிறவியில்லை. மனிதனுக்கு மரணத்தை தருகின்ற அசுத்த தேகமே தொடர் பிறவிக்கு காரணமாகிறது. புலால் உணவு அசுத்த தேகத்திற்கு காரணமாகிறது.

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் **255.**

(அளறு – நரகம்)

என்ற வள்ளுவக் கடவுளின் வாக்கின்படி புலால் உணவினை உண்பவர்களை தொடர் பிறவியான நரகம் பற்றிக் கொண்டு விடாது. புலால் உணவே மனிதன் குணக்கேடுகளுக்கும் காரணமாக அமைகிறது. மகான் முருகப்பெருமானின் ஆசியைப் பெற்று, உடம்பில் உள்ள அசுத்தத்தை நீக்குவதால், குணக்கேடுகள் நீங்கி, மனத்தூய்மை பெற்று, குணப்பண்புகள் பெருகி சுத்த தேகம் நிலைப்பெற்று ஒளி தேகமாகிறது என்பதை மகான் அவ்வையார்,

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

– ஔவைக்குறள் – அதிகாரம் 2 – உடம்பின் பயன்.

என்று அருளியுள்ளார்கள். மகான் முருக பெருமான் இந்த உலகிற்கு அருளியுள்ள சன்மார்க்க கொள்கையே மாசற்ற கொள்கையாகும். மாசுள்ள தேகமே பற்று பாசத்தில் அகப்பட்டுக் கொள்கிறது. பற்றுள்ள தேகமே மாசுள்ள தேகமாகும். மாசற்று விட்டால் மீண்டும் பிறவியில்லை என்பதை வள்ளுவக் கடவுள்,

பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்.

– திருக்குறள் – துறவு – குறள் எண் **349.**

என்று தொடர் பிறவியை அறுப்பது பற்றற்ற, மாசற்ற தேகமே என்று அருளியுள்ளார்கள். மீண்டும் பிறவாமை என்ற ஆற்றல் பெற்றவர்களே ஞானத்தை பெற முடியும் என்பதை வள்ளுவ மகான்,

பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

– திருக்குறள் – மெய்உணர்தல் – கவிஎண் 358.

என்று அறிவுறுத்தியுள்ளார்கள். மகான் முருக பெருமானின் ஆசியைப் பெற்ற ஒன்பது கோடி ஞானிகளும் பிறவா வரம் பெற்ற சுத்த தேகிகளாவார்கள்.

இந்த சூட்சுமங்களை இந்த உலகிற்கு அறிவித்தவர் இந்த உலகின் முதல் சுத்த தேகியான ஞானக்கடல் மகான் முருகபெருமானாவார். சுத்த தேகத்தை தக்க வைத்து உறுதியாக நிலை நிறுத்திக் கொண்டவர்களே ஞானம் பெற்றவர்களாவார்கள். உண்மைப் பொருளான மகான் முருக பெருமான் திருவடிகளை உணர்ந்தவர்களே ஞானத்தை உணர முடியும் என்பதையும் வள்ளுவக்கடவுள்,

ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.

– திருக்குறள் – மெய் உணர்தல் – குறள் எண் 357.

(ஓர்த்து – ஆராய்ந்து)

ஒருவனுடைய உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாக உணர்ந்தால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உள்ளதென எண்ண வேண்டா.

நன்றி – மு.வரதராசனார்.

என்று அருளியுள்ளார்கள். கிடைப்பதற்கரிய மனித பிறவி கிடைத்தும் , மாசற்ற முருக பெருமான் திருவடிகளை பூசிக்காமல் இருப்பதால் இந்த வாய்ப்புகள் மனித வர்க்கத்திற்கு எட்டாமல் இருக்கிறது என்பதை மகான் திருமூலத்தேவர்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

– திருமந்திரம் – கேடு கண்டிரங்கல் – கவிஎண் 2090.

என்று அறிவுறுத்தியுள்ளார்கள். சுத்த தேகியான மகான் திருமூலதேவனை ஆசானாக வழிப்பட்டு வந்தால் அரிய மனித பிறவியைப் பெற்றவர்கள் பிறவியின் நோக்கமான மீண்டும் பிறவாமையை உணரலாம்.

மகான் முருகபெருமானின் மறு அவதாரமான துறையூர் ஓங்காரகுடிலாசான் தவத்திரு. ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்,

கடுந்தவம் மேற்கொண்டு உடம்பில் உள்ள அசுத்த தேகத்தை நீக்கி சுத்த தேகம் பெற்றவராவார் என்று மகான் கதம்ப மகரிஷி அருளியுள்ளார்கள். ஓங்காரகுடிலாசான் போதித்து வரும் சுத்த சைவ சன்மார்க்க நெறி உலகம் முழுவதும் பரவி வருவதால் உலகமே தர்ம வழியில் செயல்படும் என்றும் மகான் முருக பெருமான் தலைமையில் உலகமே ஞான பூமியாக மாறும் என்றும் ஓங்காரகுடிலாசானின் ஆசிப்பெற்ற மக்கள் அனைவரும் ஞானவான்களாக மாறுவார்கள் என்றும் மகான் கதம்ப மகரிஷி அருளியுள்ளார்கள்.

ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

நலமாம் வேலனை நாளும் போற்றிட
வளமே உண்டாம் வாழ்வும் செம்மையே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1329

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.05.2023**, சனிக்கிழமை

**1.** அறம்காக்கும் அண்ணலே அரங்கா வாழ்க
அன்னதான சேவையாற்றும் ஞானியே வாழ்க
வரம்தந்து ஆறுமுகன் யான் உன்னுள்ளே
வல்லமைபட உலகமாற்றம் நிகழ்த்திவர

**2.** வருகவே அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **06** ம் நாள், **20.05.2023**, சனிக்கிழமை)
வல்லமைபட ஆறுமுகன் யான் எடுத்துரைப்பேன்
தருகின்ற குணத்தை மக்களுக்கு படைத்து
தயவான உலகமாற்றம் நிகழவேண்டி இனிதே

**3.** இனிதே சேவையாற்றும் அரங்கனே
இணையில்லாத கலியுகத்தின் ஞானியே
கனிவேலவன் யானே உன்னுள் இருக்க
கலியுகம் ஞான யுகமாக மாற்றம் பெறுவது உன்சேவையால் உறுதியப்பா

4. உறுதி கொண்டு உன்வழி
உன் தொண்டர்கட்கு ஆற்றல் கூட்டி
கருதி பணிந்து கடைமையாற்றும் உன்வழித் தொண்டர்களுக்கும்
கந்தவேலன் யான் அவரவர்க்கும் அருளிவர

5. வருகவே ஞான தீட்சை
வல்லமைபட அன்னதான தீட்சை
திறம்பட பெற்று உன்வழி
தொடருகின்ற தொண்டர்களெல்லாம்

6. என்வழி பிசகில்லாத மார்க்கத்தில் இனிதே
அற்புதம்பட கலந்து இணைந்து
அவரவரும் இனிபிறவா பேற்றை
துணிவுபட உன்னருளால் உன் ஆசியால் அடைவரப்பா

7. அப்பனே அரங்கன் தரும் தர்மமே
அளவில்லா உயர் தர்மம்
காப்பாக அரங்கன் தரும் ஞானமே
கலியுகத்தில் மக்கள் மீள உண்டான உயர் ஞானம்

8. ஞானவழி பின்பற்றி உலகோர்
தொடர்ந்து வருக வருக
ஞானிகளாகி அவரவர்
பிறவாமை பெற்று சிறக்க நேரும் ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

<u>உயர்ந்த பிறவியான மனித பிறவியை பெற்றவர்களுக்கு வழித்துணை!</u>

கடவுள் படைப்பில் மிக உயர்ந்த படைப்பான மனித வர்க்கத்திற்கு மட்டுமே மரணமில்லா பெருவாழ்வு என்ற அரிய வாய்ப்பு உண்டு. இதை கண்டறிந்தவர் ஞானபண்டிதன் மகான் முருகபெருமானாவார். இந்த வாய்ப்பினை பெறுவதற்கு மகான் முருகபெருமானின் பரிபூரண ஆசியினைப் பெறவேண்டும். மகான் முருகபெருமானின் ஆசியினைப் பெற விரும்புகிறவர்கள் சைவ உணவினை மேற்கொண்டு, ‘‘ஓம் சரவணஜோதியே நமோ நம’’ என்ற மகா மந்திரத்தை கூறிக் கொண்டு ஜோதி ஏற்றி, மகான்

முருகபெருமான் திருவடிகளை “ஓம் முருகபெருமான் திருவடிகள் போற்றி” என்று காலை மாலை சிறிது நேரம் பூசித்து வரவேண்டும். மேலும், வாரம் ஒரு பசித்த ஏழைக்காவது அன்னதானம் செய்து வரவேண்டும். கடவுளின் உயர் படைப்பான மனித வர்க்கத்திற்கு அன்னதானம் செய்து பசியாற்றுவிப்பதே உண்மையான சிவ பூஜையாகும். இதுவே மகேசுவர பூஜை எனப்படும். ஆறறிவு உள்ள மனிதர்களுக்கு மட்டும்தான் பிறர் துன்பத்தை உணரவும், அதை தீர்க்கவும் முடியும். இது மனிதர்களுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு.

– திருக்குறள் – கண்ணோட்டம் – குறள் எண் 571.

ஒருவருக்கு ஒருவர் பரிவு காட்டி உதவி செய்கின்ற பண்பு இந்த உலகத்தில் இருப்பதால்தான் உலகம் இன்றும் அழியாமல் இருக்கின்றது என்று வள்ளுவ கடவுள் உபதேசித்துள்ளார்கள்.

சைவத்தை கடைப்பிடித்து, அன்னதானம் செய்து, மகான் முருகபெருமானின் திருவடிகளில் பக்தி செலுத்தும் மக்களுக்கு ஞானபண்டிதனின் முழு ஆசியும் கிடைக்கும். ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் ஞானம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. மகான் முருகபெருமான் திருவடிகளை தொடர்ந்து பூசித்து வருபவர்களுக்கு மட்டும் தான் இந்த வாய்ப்பு கிடைக்கும்.

போற்றுவோம் முருகபெருமான் திருவடியை!
பெறுவோம் பேரின்ப வாழ்வு!!

நலமாம் வேலனை நாளும் போற்றிட
வளமும் உண்டு வாழ்வும் செம்மையே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

**தினமணிக்கதிரின் பெருமை**

வளமாம் தினமணியை வாங்கியே படித்திட
நலமாம் செய்திகள் நாளும் அறியலாம்

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்.